RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2229

# உடையார் நாவலில் வழிபாட்டு முறைகள்

பா அன்னிபெசன்ட் [அ, *], க. ஜெயஷீலா [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது), நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா

# Methods of Worship in Udayar's Novel

P. Annibesant [a, *], K. Jayaseela [a]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), (Affiliated to Manonmaniam Sundaranar University) Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author: pannibesant@gmail.com

Received: 21.09.2022
Revised: 17-11-2022
Accepted: 21-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

The methods of worship are evolving with the times. Since the Sangam age, people have worshipped Minor Deities and Great Deities. The people of the Pandya country built small temples and worshipped Thirumal. Summoned to the Chola country for the construction of a temple, they discovered the construction of a huge temple and built other temples in their country, such as the Madurai Meenakshi Amman temple. Thus, the efforts of the Cholas to worship God led to the formation of many great temples of worship all over Tamil Nadu in later times. During the reign of Rajaraja Thevar, the reason for his self-sacrifice was found, and the family got a high status. The Cholas accepted the worship of Shakti. They learned about Vaishnavism and praised that time as well. They excelled in the promotion of Saivism. Festivals were performed in temples. Thus, the worship of the Cholas became of great importance.

**Keywords:** Worship, Udayar's Novel, Rajaraja Thevar, Chola King

## முன்னுரை

தமிழர்களின் வழிபாட்டு முறை காலத்திற்கு ஏற்ப வளர்ச்சியடைந்து வருகின்றது. இயற்கையை வழிபட்டத் தமிழர்கள் நாளடைவில் அவ்வியற்கையை இறைவன் இயக்குவதாக நம்பினர். இதனால் சங்க காலத்தில் முருகன் என்று பெயர் வைத்து கடவுளை வழிபட்டனர். சங்க மருவிய காலத்தில் புத்தம் மற்றும் சமண சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் குகைக் கோயில்கள் அமைத்து இறை வழிபாட்டினை மேற்கொண்டனர்.சோழர்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் துவண்டு போன தமிழ் சமூக வழிபாட்டு முறைகளைப் புத்துயிர் கொடுக்க முனைந்தனர். அவ்வகையில் பிற்காலச் சோழர்களில் குறிப்பாக உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் சைவ சமயக் கடவுளை ஆதரித்தனர். இழந்துபோன தமிழ் வழிபாட்டினை மீட்டெடுத்தனர். இக்கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு உடையார் நாவலின் கருத்துக்கள் துணைபுரிகின்றது.

## உடையார் நாவல்

பாலகுமாரன் அவர்களால் எழுதப்பட்ட நாவல் உடையார் நாவல் ஆகும். இந்நாவல் உண்மை மற்றும் கற்பனைக் கலந்து சோழர் வரலாற்றை விவரிப்பதோடு நின்றுவிடாமல் தமிழ் மக்களின் வழிபாட்டு முறைகளையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது. உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின்

தமையனை உடையாரின் சிற்றப்பா மதுராந்தகன் கொலை செய்தான். உடையார் ஆட்சி பொறுப்பை ஏற்றபின் அக்கொலைக்குக் காரணமான மதுராந்தகனின் ஆட்களைத் தண்டித்து நாடு கடத்தினார். நாடு கடத்தப்பட்ட அவர்கள் மீண்டும் மந்திர தந்திரங்ளைக் கற்று சோழர் குலத்தை அடியோடு அழிக்க எண்ணினர் இறைப்பற்று மிக்கவர்களை மந்திரத் தந்திரங்களால் அழிக்க முடியாது என்பதை சோழ தேசத்தின் ஞானியான கருவூர்த்தேவர் உதவியுடன் அறிந்த உடையார் சோழ தேசத்தின் தலையாயக் கடவுளுக்கு (சிவபெருமான்) முக்கியத்துவம் கொடுத்தார்.

## கோயில் கட்டுவதற்குக் காரணங்கள்

மதுராந்தகன் தனது ஆட்சியில் கோவில் கட்டுவதாகக் குறிப்பிட்டு பழைய கோவில்களைப் புதுப்பித்தான் அதன் அளவு சிறியதாக இருந்தது. இதனால் நான்கு பனையளவு உயரம் உள்ள கோவில் எழுப்ப உடையார் திட்டம் இட்டார். தஞ்சை பெரியக் கோவிலை எழுப்பியதோடு மேலும் பலக் கோவில்களை உடையார் எழுப்ப விரும்பினார் என்பதை “சோழ நாகரிகத்தைக் காப்பாற்றுவதே என்னுடைய குறிக்கோள் அதற்காகவே இந்தக் கற்றளி பணி நடக்கிறது” நாவல் பகுதி தெளிவுபடுத்துகிறது (Balakumaran, 2017a). உடையார் தான் கட்டிய கோவிலில் சேரர்கள், பாண்டியர்கள் மேலைச் சாளுக்கியம் கீழைச் சாளுக்கியம் என்று பலநாட்டு வீரர்களின் உதவியையும் நாடினார். எனவே பரதகண்டம் முழுவதற்கும் தஞ்சை பெரியக்கோவில் உரிமை உடையதாக உள்ளது. தமிழர்களின் கலாச்சாரத்தை உலக மக்கள் அனைவரும் அறியும் நோக்கில் சோழர்களின் கோயில் பணி விரிவடைந்திருந்தது. “சோழர் காலக் கோவில்களுள் தலைச் சிறந்ததாக மதிக்கப்படுவது முதல் இராசராசன் அமைத்த தஞ்சைப் பெரிய கோவில் ஆகும்” பெரிய கோவில்கள் கட்டுவது மூலம் தமிழர்களின் வழிபாட்டினை உலகறியச் செய்யும் பணியினைச் சோழர்கள் மேற்கொண்டனர் என்பது புலனாகின்றது (Ramakrishnan, 2012).

## சோழர்களின் தெய்வ வழிபாடு

சோழர்கள் பெண் தெய்வங்களை வழிபட்டனர். பெண் தெய்வங்கள் சிவ பெருமானுடன் நெருங்கியத் தொடர்புடையவை என்பதால் சிறு தெய்வங்களைச் சோழர்கள் ஆதரித்தனர். “கிராமங்களில் காணப்படும் அம்மன் காளி போன்றவைகள் சிறு தெய்வங்களாகும்” என்று சிறுதெய்வம் குறித்து அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர் (Chandrasekaran, 2003). சோழர்கள் தங்கள் கிராமங்களில் உள்ள குல தெய்வங்களை வழிபட்டனர். திருவக்கரை என்னுமிடத்தில் அமைந்துள்ள கோவிலில் வக்ரகாளி சோழர்களின் குல தெய்வமாகத் திகழ்ந்தாள். மருவூர் மஹமாயா சோழர்களின் காவல் தெய்வமாகத் திகழ்ந்தாள். பெண் தெய்வங்களை வழிபடும் முறை சக்தி வழிபாடு என்று அழைக்கப்படுகின்றது. கருவூர்த்தேவர் சக்தி வழிப்பாட்டாளராகவும், சிறந்த ஞானியாகவும் திகழ்ந்தார்.

“சோழர்களின் குல தெய்வம் என்றால் அது தஞ்சையில் இருக்கின்ற நிசும்ப சூதனி” சோழர்கள் சிவபெருமானுக்குக் கீழ் செயல்படும் சிறு தெய்வங்களையும் வழிபட்டுள்ளமை அறியப்படுகின்றது. கோயில் கட்டப்பட்ட நிலையில் அதில் கணபதி கிருஷ்ணன் முதலிய உருவங்களை வைத்ததால் சோழர்கள் ஆண் சிறு தெய்வங்களையும் ஏற்றுக் கொண்டனர் என்பது புலனாகின்றது (Balakumaran, 2017b).

## நடுகல் வழிபாடு

பாண்டியர்கள் நடுகல் வழிபாட்டினை விரும்பினர். சோழர்களும் நடுகல் வழிபாடு குறித்து அறிந்திருந்தனர். போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல்அமைத்து வழிபடுவது மட்டுமின்றி அக்குடும்பத்தினருக்கு நிலம் முதலியவற்றை நிவாரணமாக வழங்கினர் உடையார் தனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 9-12) போரில் தன்னை பலியிட்டுக் கொண்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு பதவி உயர்வு வழங்கினதால் நடுகல் வழிபாட்டு முறை சோழர்காலத்தில் குடும்பங்களை ஆதரிக்கும்

விதத்தில் அமைந்தது. "போரிலே விழுப்புண்பட்டு வீழ்ந்திறந்த வீரரைத் தெய்வமாகப் போற்றினர் அவர்களைக் கல்லில் அமைத்து வழிபட்டனர்" (Kailasapathy, 1999).

சோழர்கள் போர் நடைபெறுவதற்கு முன்பே போரில் வெற்றி பெற வேண்டும் என்னும் நோக்கில் தன்னைப் பலியிட்டுக் கொண்டனர் விஜயாயலயச் சோழனின் ஆட்சியில் நிகழ்ந்த போரில் ஒரு வீரன்" "காளியிடம் பிராத்தனை செய்து கொண்டு தன்னைப் பலியிட்டுக் கொண்டான்" தஞ்சைக் கோவில் எழுப்பப்பட்ட காலத்தில் பலியிடுதல் முறை ஆடு கோழிகளைப் பலியிடுதல் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதை உடையார் நாவல் குறிப்பிடுகின்றது. உடையார் போருக்குச் செல்லும் பொழுதும் வீரர்கள் தன்னைப் பலியிட்டுக் கொள்ள முயற்சி செய்தனர். உடையார் இதனை தடுத்தார் (Balakumaran, 2017b).

## வழிபாடு பொருள் விளக்கம்

வழிபாடு என்பதற்கு பின்பற்றுதல், வணங்குதல் என்பது பொருள். தற்காலத்தில் ஒவ்வொருவருக்கும் பிடித்தமான சமயக் கடவுளை வணங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. உடையாரும் அவரின் ஆட்சிக் காலத்தில் மக்கள் தங்களக்குப் பிடித்தமான மதத்தைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கினார்.

## வழிபாட்டு ஒற்றுமை

உடையார் ஸ்ரீ இராஜ ராஜத் தேவர் ஒவ்வொருவருக்கும் பிடித்த மத்தை வழிபடுவதற்கு உரிமை அளித்தார். உடையாரின் மகள் சந்திரமல்லி சுகவனனைக் காதலித்தாள். இளவரசன் இராஜேந்திரன் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தான். சுகவனன் கொலை செய்யப்பட்டான் சுகவனனை இராஜேந்திரன்தான் கொலை செய்திருப்பான் என்று சந்திரமல்லி உணவு அருந்தாமல் நோயுற்றாள். பௌத்தர்கள் அவளின் நோயைக் குணப்படுத்தியதால் அவள் பௌத்த மதத்திற்கு மாறினாள் இதற்கு உடையார் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. "என்னுடைய ஆட்சியில் யாருக்கும் எந்த மதம் பிடிக்கிறதோ அந்த மதத்தை அவர்கள் பின்பற்றலாம்" என உடையார் குறிப்பிடுவதன் மூலம் சோழர்கள் மக்களுக்கு பிடித்த மதத்தைப் பின்பற்ற உரிமை பெற்றனர் என்பது புலனாகின்றது (Balakumaran, 2017b).

## வைணவர்களின் வழிபாட்டு முறை

சோழ தேசத்தில் பாண்டிய தேசத்திலிருந்து அடிமை வீரர்களாக வரவழைக்கப்பட்ட வீரர்கள் வைணவ மதத்தைப் பின்பற்றினர். சோழ நாட்டில் அவர்கள் துளசி மாடம் அமைத்து திருமாலை வழிபட முடியாது என்று வருந்தினர். அவர்களின் வருத்தத்தைப் போக்க இளவரசன் இராஜேந்திரன் துளசிச் செடிகளை வேரோடு பிடுங்கிவர ஏற்பாடு செய்தான்.

இதே திருவொற்றியூரிலுள்ள பெருமாள் கோயிலுக்குப் போய் பூஜை செய்யுங்கள்" என்று சோழர்கள் வைணவ சமயத்தை ஆதரித்தமை தெளிவாகின்றது (Balakumaran, 2017b). வழிபாடு, சடங்கு, திருமணம் போன்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழுக்கு சிறப்பிடம் நல்கும் சமயம் வைணவ சமயம் ஆகும். வைணவர்களின் வழிபாட்டுத் தெய்வம் திருமால், பிரம்மராயர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் "வைணவ பாச்சுரங்களில் தனி இனிமையும் பக்திப் பெருக்கும் சொற்சுவையும் கற்பனை நயமும் இழையோடும்" வைணவர்கள் நாச்சியார் கோவிலை விரும்பினர், திருமங்கையாழ்வருக்கும் பிடித்தத் தலமாக இக்கோவில் திகழ்கிறது. சங்கு சக்கரத் தாரியாக சீனிவாசன் பக்தரை ஆட்கொள்வதாக இத்தலம் அமைகின்றது (Thamizhannal, 2013).

## மாளிகைகளும் வழிபாடும்

அரசவை மக்கள் தங்குகின்ற மாளிகைகளிலும் சோழர்கள் இறைவனை வழிபட்டனர். "மிகப்பழங் காலத்தொட்டே இந்தியாவின் வழிபாட்டு இடமாகவும் சமய நிறுவனமாகவும் கோயில் இருந்து

வருகிறது சேர தேசத்துக் கோவில்கள் அளவில் சிறியதாக இருந்தது. கி.பி. 10 மற்றும் கி. பி 11 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் விமானம் அமைத்து கோவில் எழுப்பினர். இதனைப் பார்த்து பாண்டியர்கள் கோபுரம் அமைத்து கோவில் எழுப்பினர். சோழர்கள் தங்கும் இடங்களிலும் வழிபாட்டு வசதிகளை அமைத்தனர் என்பது அறியப்படுகின்றது. "சிவலிங்கம் அமைத்து சிவலிங்கத்துக்கு எதிரே சற்றுத் திரும்பிய வண்ணம் இருக்கிற நந்தியும் வைத்து மாளிகையையே கோயிலாகச் செய்திருந்த அழகான இடம் அது" என்னும் நாவல் வரிகள் சோழர்கள் மன்னர்கள் மற்றும் அரசவை மக்கள் தங்கும் மாளிகையில் சிவவழிபாட்டு வசதிகளை அமைத்துக் கொண்டனர் என்பது தெளிவாகிறது (Balakumaran, 2017b).

## பிரம்மராயரின் வழிபாட்டு முறை

சோழர் தேசத்தில் முதன்மை அதிகாரியாக பணியாற்றிய பிரம்மராயர் வைணவ மதத்தைச் சார்ந்தவர் சைவ சமயத்தைக் குறித்தும் அறிந்திருந்தார் சோழர் காலத்தில் சமயங்களிடையே ஒற்றுமை நிலவியதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். முதன்மைக் கடவுளாகிய சிவபெருமானைத் தவிர பிற தெய்வங்களை வழிபட்டாலும் முதன்மைக் கடவுளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அம்பாள் வழிபாடு அமண்கடி துர்க்கைவழிபாடு சிவ வழிபாடுடன் இணைந்தே செயல்படுவதால் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் எந்தச் சடங்குகளிலும் சிக்கிக் கொள்ளாமல் சோழ தேசத்தின் வளர்ச்சியிலேயே குறிக்கோளாக இருந்தார். நாட்டின் வளர்ச்சிக்கு அனைத்து சமய வழிபாட்டு முறைகளும் வளர்ச்சியடைய வேண்டும் என்னும் கருத்தினை சோழர்கள் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

## முடிவுரை

மக்களிடையே உள்ள சாதி மத பேதங்களை உடைத்து எறிந்து அனைத்து மக்களையும் ஒன்றிணைக்க தஞ்சைப் பெரியக் கோவில் உதவியது. மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தும் நோக்கம் தமிழகத்தில் பிற்காலத்தில் அமைந்த வழிபாட்டு முறைகளில் அமைந்தது. பலியிடுதல் என்னும் ஆரியக்கலப்பினை அகற்றி தமிழர்கள் தங்கள் தூய்மையான பணபாட்டினைப் பாதுகாக்க சைவர்களின் வழிபாட்டு முறை காரணமாக அமைந்தது. கோவில்களில் பின்பற்றப்படும் வடமொழி ஆச்சாரங்களைத் தவிர்த்து பக்திப் பாடல்களைப் பாடி தமிழர்களின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்குச் சோழர்களின் வழிபாட்டு முறைகள் உதவின என்பது தெளிவாகின்றது.

## References


Balakumaran, (2017a) Udaiyar, Vol 6, Visa Publications, Chennai, India

Balakumaran, (2017b) Udaiyar, Vol 1, Visa Publications, Chennai, India

Chandrasekaran, R. (2003) nattuoura valipatu marabukalum nambikaikalum, Vharathiar Library, Coimbatore, India

Kailasapathy, K. (1999) Pandai Tamizhar Vaazhvum Vazhipaadum, New Century Book House, Chennai, India

Ramakrishnan, A. (2012) Thamizhar Varalaarum Panpaadum, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, India

Thamizhannal, (2013) Puthiya Nokkil Tamil Ilaikiya varalaru, Meenakshi Puthaka Nilayam, Madurai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License